

## உங்களிடம், நான் எதிர்பார்க்கின்ற பொங்கல் பரிசு:

# 2026-இல் தி.மு.கழகம் ஆட்சி அமைந்திட, ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதுதான்!

## சேப்பாக்கம் — திருவல்லிக்கேணியில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை,ஜன.8—**

**சென்னை, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற பொங்கல் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, 3,500 கழக நிர்வா-கிகள் மற்றும் பொதுமக்களுக்கு பொங்கல் சிறப்பு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ‘‘கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாவது முறையாக ஆட்சிக்கு வர வேண்டும் என்றால், அந்தப் பொறுப்பு நம் ஒவ்வொருவரின் கைகளில்தான் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். இதுதான் இந்தப் பொங்கலுக்கு நான் உங்களிடம் எதிர்பார்க்கின்ற பொங்கல் பரிசு’’ என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

முதலில் அத்தனை பேருக்கும் என்னுடைய இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் எழுந்து எவ்வளவுதான் ஊர் சுற்றினாலும், இரவு உறங்கு வதற்கு, ஓய்வு எடுப்பதற்கு வீட்டுக்கு வந்துதான் ஆக வேண்டும். அதுபோலத்தான் தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், எந்த மாவட்டத் திற்குச் சென்றாலும் இறுதியாக நான் வந்து சேரும் இடம் இந்தச் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி. அதிலும் உங்களை யெல்லாம் எப்பொழுதோ பார்க்கிறவன் கிடை யாது, எப்பொழுதுமே பார்க்கிறவன்.

இன்று பொங்கலுக்காக இது ஒரு காரணம் என்று வைத்து உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை, சிற்றரசு அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். பொங்கலாக இருந்தாலும் சரி, கிறிஸ்துமஸாக இருந்தாலும் சரி, ரம்ஜானாக இருந்தாலும் சரி, கோவிட் காலமாக இருந்தாலும் சரி, நாம் அத்தனை பேரும் எப்பொழுதுமே ஒன் றாகத்தான் பயணித்திருக்கிறோம்.

### கழக நிர்வாகிகள் உழைப்பு

குறிப்பிட்டுப் பெருமையாகச் சொல்ல வேண் டுமென்றால், கடந்த முறை முதன்முறையாகச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டேன். தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை. தலைவர் ஒரு பக்கம் சுற்றுப்பயணத்தில் இருந்தார், என்னால் முடிந்த அளவிற்கு நானும் சுற்றுப்பயணத்தில் இருந்தேன். தேர்தலில், தொகுதிக்கு அறிமுகம், முதல் தேர்தல், முதல் தொகுதி, மொத்தமே நான்கு நாட்கள்தான் பிரச் சாரத்தில் ஈடுபட்டேன். இருந்தாலும் கிட்டத் தட்ட 70,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள் என்றால், அது இங்கு வந்திருக் கக்கூடிய கழக நிர்வாகிகள் உங்களுடைய உழைப்புதான் காரணம். வேறு எந்தக் காரண மும் கிடையாது.

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் எந்தச் சூழ் நிலையிலும் நாம் அத்தனை பேரும் ஒன்றாகப் பயணித்து மக்களோடு நின்றிருக்கிறோம். நல்ல தாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி நான் உங்களோடு நின்றிருக்கிறேன், நீங்களும் என்னோடு நின்றிருக்கிறீர்கள். நாம் இருவரும் சேர்ந்து மக்களோடு மக்களாக எல்லாவற்றிற்கும் நின்றிருக்கிறோம்.

அதைக் கொண்டாடுகின்ற விதமாக இன்று இந்தப் பொங்கல் திருவிழாவை நம்முடைய தலைவர் அவர்கள் இந்த ஆண்டு ‘திராவிடப் பொங்கல்’, ‘சமத்துவப் பொங்கலாகச்’ சிறப்பா கக் கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தி யிருக்கிறார்கள். அதன்படி, இன்று இந்தப் பொங் கல் பண்டிகையை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர். முதலில் அவருக்கும், மாவட்ட கழக நிர்வாகத்திற்கும் சட்டமன்ற உறுப்பினராக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### தி.மு.க. வின் கோட்டை

உங்களைப் பார்த்து, இந்த முறை நீங்கள் அத் தனை பேரும் தேர்தல் பிரச்சாரத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டும், இந்த முறை நாம் அதிக வித் தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என்று கேட் பதற்காக நான் வரவில்லை. நீங்கள் கொடுக்கின்ற உத்வேகத்தில்தான் நான் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்ய வேண்டும்.

எனவே, இந்த முறை தலைவர் யாரை உங்க ளிடம் ஒப்படைத்தாலும் சட்டமன்றத் தேர்தலில் கடந்த முறை பெற்ற வாக்கு வித்தியாசத்தைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற் றிபெற வைக்க வேண்டும் என்று கேட்க வேண் டிய அவசியம் இல்லை. தலைவர் கேட்டார் என் றால், தலைவர் சொன்னார் என்றால் நீங்கள் செய்துவிடுவீர்கள். ஏனென்றால், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி என்பது எப்பொழுதுமே கலை ஞரின் கோட்டை, தி.மு.க. வின் கோட்டை.

புதியவர்கள் வரலாம், வேடம் காட்டலாம். ஏற்கனவே நான் சொன்னது போலத்தான், வெறும் அட்டை, ஒரு சிறிய காற்று அடித்தது என்றால், காணாமல் போய்வி டும். உங்களிடம் நான் கேட்டுக்கொள் வதெல்லாம் தலைவர் அவர்கள் நமக்குச் சொல்லியிருக்கக்கூடிய பணி ‘என் வாக் குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’. அந் தப் பணிகளை நாம் சரியாகச் செய்ய வேண்டும்.

### ஐந்து கையெழுத்துகள்

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான் கரை ஆண்டுகளில் தலைவர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தியிருக்கிறார். ஒரு சில திட் டங்களை மட்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாள் முதலமைச்சராகப் பொறுப் பேற்றுத் தலைவர் இட்ட முதல் ஐந்து கையெழுத்துகளில் முதல் கையெழுத்து மகளிருக்கான இந்த விடியல் பயணத் திட்டம். ஒவ்வொரு மாதமும் மகளிர் கிட்டத்தட்ட 900 ரூபாய் வரை சேமித் திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 900 கோடி பயணங்களை மகளிர் மேற் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது தான் அந்தத் திட்டத்தின் வெற்றி. அது தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி.



### தமிழ்ப் புதல்வன் திட்டம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். இன்று ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தை கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன்பெறு கிறார்கள். காலையில் எழுந்து முதலில் குழந்தை களுக்குத் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வி வழங்கப்படுகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தொடங்கிவிட் டார்கள், கல்வி கற்கத் தொடங்கிவிட்டார்கள். பள்ளிப் படிப்பு மட்டும் போதாது கல்லூரிக்குச்




செல்ல வேண்டும் என்று நம்முடைய தலைவர் உருவாக்கிய திட்டம்தான் புதுமைப் பெண் திட் டம் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி கல்லூரியில் படித் தால் உங்களுக்கு மாதம் 1000 ரூபாய் கல்வி ஊக் கத்தொகை நான் தருகிறேன் என்று இன்று முத லமைச்சர் அவர்கள் இத்திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்ற ஒரு திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரி மைத் தொகைத் திட்டம். ‘‘நிச்சயமாகச் செய்ய முடியாது’’ என்று எதிர்க்கட்சிகள் சொன்னார் கள். கடும் நிதிநெருக்கடி. ஆட்சிப் பொறுப் பேற்று கிட்டத்தட்ட ஆறு மாத காலம் கோவிட் கொரோனா காலப் போராட்டத்திலேயே சென் றுவிட்டது. அதன் பிறகு நம்முடைய தலைவர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இன்று ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1000 ரூபாயை, நம்முடைய தலைவர் அவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

### நம்பர் 1 மாநிலம்

இப்படிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற் றியதினால்தான் இன்று இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக, வளர்ச்சி அடைந்த மாநிலமாக, இன் னும் சொல்லப்போனால் வரலாற்றிலேயே முதன் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சி, 11.19 சதவிகிதத்துடன் இன்று தமிழ்நாடு இந்தியாவி லேயே நம்பர் 1 மாநிலமாக இருக்கிறது.

குறிப்பாக, மகளிருக்காகச் செயல்படுத்தும் திட்டத்தினால் இன்று இந்தியாவிலேயே வேலைக்குச் செல்லும் மகளிர் அதிகமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு. 43 சதவிகித மகளிர் இன்று வேலைக்குச் செல்கிறார்கள். இப்படி இன்று இந் தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக, சிறந்த முதலமைச்சராக நம்முடைய தலைவர் அவர்கள் செயல்பட்டிருக்கிறார் என்றால், அவருக்கு 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மிகப்பெரிய வெற்றி யைத் தேடித் தர வேண்டியது நம் கடமை.

தலைவர் அவர்கள், ‘வெல்வோம் 200, படைப்போம் வரலாறு’ என்று சொல்லியிருக்கி றார். நிச்சயமாக இந்தச் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து அந்த வெற் றியை நாம் தொடங்க வேண்டும். அதில் முதன்மைத் தொகுதியாக, நம்முடைய தொகு தியை மாற்றிக் காட்ட வேண்டும். அதை மாற்றிக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கி றது.

நாம் ஒரு பக்கம் அரசு சார்பாகவும், கட்சி சார்பாகவும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம், பல்வேறு நலத்திட்டங்க ளைச் செய்து கொண்டிருந்தாலும் ஒன்றிய பா.ஜ.க அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது? நம்முடைய அரசுக்கு எந்த வகையிலெல்லாம் தொந்தரவு கொடுக்க வேண்டும், மாநில உரிமை களை எப்படிப் பறிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் தாண் டித்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

### கழகத்தின் உடன்பிறப்புகள்

தொடர்ந்து மிரட்டல், உருட்டல். நேற்று தமிழ்நாட்டிற்கு ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் வந்திருந்தார். ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது என் பெயரைச் குறிப்பிட்டுப் பேசுகிறார். அவருக்கு எப்பொழுதும் என் நினைவாகவே இருக் கும் என்று நினைக்கிறேன். என்ன சொல் கிறார்? என் பெயரைச் சொல்லிக் குறிப் பிடுகிறார். என் பெயரைச் சொன்னதனால் எனக்குப் புரிந்தது, இல் லையென்றால் எனக்குப் புரிந்திருக்காது. ‘‘எதற்கு என் பெயரைச் சொல்கிறார்?’’ என்று கேட்டேன், பிறகு சொன்னார்கள் - ‘‘திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை நாங்கள் முதலமைச்சராக விடமாட் டோம்’’ என்று அவர் சொல்கிறாராம். நான் இப்பொழுது கேட்டேனா? நீங்கள் என்ன கூச்சல் போட்டாலும், என்ன சதித்திட்டம் செய்தாலும், தமிழ்நாட்டு மக்கள் எங்களின் தலைவரைத்தான் மீண்டும் முதலமைச் சராக அமர வைப்பார்கள். அது உறுதி.

நிச்சயமாக, தமிழ்நாட்டு மக்கள் மற்றும் கழ கத்தின் உடன்பிறப்புகள் பா.ஜ.க-வின் இந்த உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் பயப்படக்கூ டிய ஆட்கள் நாம் கிடையாது. நீங்கள் மிரட்டி னால், பயப்படுவதற்கு நாங்கள் அண்ணா தி.மு.க கிடையாது, அண்ணா உருவாக்கிய தி.மு.க.

இங்கு வந்திருக்கக்கூடிய நிர்வாகிகளிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இரண்டு மூன்று விஷயங்கள்தான், அன்பு வேண்டுகோள் தான். இன்னும் தேர்தலுக்குச் சரியாக 100 நாட் கள்தான் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் மிக மிக முக்கியம். வந்திருக்கக்கூடிய நிர்வாகிகள் நம் பணிகளைச் சரியாகச் செய்ய வேண்டும். நமக்குள் ஒற்றுமை, ஒருங்கி ணைப்பு இருக்க வேண்டும். சிறிய மனக்கசப்புகள் இருக் கும், அதையெல்லாம் மறந்துவிட்டு, நமக்கு இருக் கக்கூடியஒரே இலக்கு - சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி யில் மிகப்பெரிய வாக்கு வித் தியாசத்தில் வெற்றிபெற்று காட்ட வேண்டும். அந்த வெற்றியை உறுதி செய்ய வேண்டும்.

> **தி.மு.க. - வின் கோட்டை !**
>
> **இந்த முறை தலைவர் யாரை உங்களிடம் ஒப்படைத்தாலும் சட்ட மன்றத் தேர்தலில் கடந்த முறை பெற்ற வாக்கு வித்தியாசத்தைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. தலைவர் கேட்டார் என்றால், தலைவர் சொன்னார் என்றால் நீங்கள் செய்து-விடுவீர்கள். ஏனென்றால், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி என்பது எப்பொ ழுதுமே கலைஞரின் கோட்டை, தி.மு.க. வின் கோட்டை.**

நிர்வாகிகள் ஒவ்வொரு வரும் எந்தப் பணியாக இருந்தாலும் - பிரச்சாரப் பணியாக இருந்தாலும், கழ கப் பணியாக இருந்தாலும், மக்கள் பணியாக இருந்தா லும் - மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண் டும். என்னென்ன சொற்களைப் பயன்படுத்துகி றோம், யாரைச் சொல்கிறோம் என்று உங்களுக்கே தெரியும். கவனமாக இருக்க வேண்டும். எல்லா ரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன், இளைஞர் அணி தம்பிகளையும் சேர்த்துச் சொல்கிறேன்.

ஏனென்றால், எதிர்க்கட்சிகள், செய்தி ஊட கங்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். ஏதாவது ஒரு சிறு தவறு நடந்துவிடாதா? தி.மு.க. நிர்வாகிகள் ஏதாவது ஒரு சிறு தவறு செய்துவிட மாட்டார் களா? அதைப் படம் பிடித்துப் பெரிதாக்கிவிட மாட்டோமா? எப்படியாவது ஒரு குறையைக் கண்டுபிடித்துவிட மாட்டோமா என்று ஆர்வத் தோடு இருக்கிறார்கள். அதற்கு தி.மு.க. நிர்வாகி கள், உடன்பிறப்புகள் நீங்கள் எந்த விதத்திலும் இடம் கொடுத்துவிடக் கூடாது என்று உங்களை யெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### பாக முகவர்கள் — பாக உறுப்பினர்கள்

‘எஸ்.ஐ.ஆர்’ (SIR) திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய தொகுதியில் கிட்டத்தட்ட 85,000 வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். இந்த எஸ்.ஐ.ஆர் திட்டம் வரும்போதே வேண்டாம் என்று சொன்னது நாம் தான், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது நாம்தான்.

குறிப்பாக, சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர், மகளிரின் வாக்குகளை எப்படியாவது நீக்கிவிட வேண்டும் என்று அந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். இன்று 85,000 வாக் குகளை நம் தொகுதியில் நீக்கியிருக்கிறார்கள். இங்கு வந்திருக்கக்கூடிய நிர்வாகிகளிடம் கேட் டுக்கொள்வதெல்லாம், தயவுசெய்து உங்களு டைய பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் வந்திருக்கி றீர்கள். ஜனவரி 18-ஆம் தேதி வரை நமக்கு நேரம் இருக்கிறது, கால அவகாசம் இருக்கிறது. அதற் குள் உங்களுடைய பெயர் வாக்காளர் பட்டிய லில் இடம்பெற்றிருக்கிறதா என்று நீங்கள் உறுதி செய்ய வேண்டும். நிச்சயம் அந்தப் பணிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயம் யாராக இருந்தாலும், தி.மு.க-வைச் சேப் பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் தொட் டுக்கூடப் பார்க்க முடியாது.

எனவே, நான் அதிகம் பேச விரும்பவில்லை. வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகள், இனிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து, அடுத்த மூன்று மாத காலம் நாம் களத்தில் ஒன்றாகப் பய ணிக்கப் போகிறோம். எனவே வாக்காளர்களைச் சந்தித்து, தினமும் பொதுமக்களைச் சந்தியுங்கள். அவர்களுடைய குறைகளைக் கேளுங்கள். உங்க ளுக்குள் பொறுப்புகளைப் பிரித்துக்கொள்ளுங்கள். ‘‘இந்த 10 வாக்காளர்க ளுக்கு நான் பொறுப்பு, இந்த 10 வீடுகளுக்கு நான் பொறுப்பு’’ என்று செயல்படுங்கள். இளைஞர்க ளைச் சந்தியுங்கள், நம்முடைய ஆட்சியின் சாத னைகளை எடுத்துச் சொல்லுங்கள், கட்சியின் வரலாற்றைச் சொல்லுங்கள், தலைவருடைய பெருமைகளைச் சொல்லுங்கள். அப்படிச் செய் தோம் என்றால் நிச்சயம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவ தும் வெற்றி பெறப் போவது நம்முடைய திரா விட முன்னேற்றக் கழகம்தான், நம்முடைய தலைவர்தான்.

கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண் டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாவது முறையாக ஆட்சிக்கு வர வேண் டும் என்றால், அந்தப் பொறுப்பு நம் ஒவ்வொரு வரின் கைகளில் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். இதுதான் இந் தப் பொங்கலுக்கு நான் உங்களிடம் எதிர்பார்க் கின்ற பொங்கல் பரிசு. அத்தனை பேருக்கும் மீண் டும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்ப டுத்திக் கொடுத்த மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கும், பகுதிக் கழகச் செயலா ளர் காமராஜ் அவர்களுக்கும், மதன்மோகன் அவர்களுக்கும், வந்திருக்கக்கூடிய வட்டக் கழகச் செயலாளர் அத்தனை பேருக்கும், அனைத்து நிர் வாகிகளுக்கும் மீண்டும் என்னுடைய பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்து இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்ட மன்றத் தொகுதி பார்வையாளர் சேகர், பகுதி கழகச் செயலாளர்கள் காமராஜ், மதன் மோகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் விக்டர், ஆனந்த் துரை, அகஸ்டின் பாபு, வி.எஸ்.கலை, சங்கீதா, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் கென்னடி, இறையன்பன் குத்தூஸ், வி.பி.மணி, வி.பி.பொன்னரசு, பி.கே.பாபு, கௌதம், தலை மைச் செயற்குழு உறுப்பினர் ராஜகாந்தம், வி.என்.ராஜன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மகுதுல்லா, இளம்பாரதி, விஜ யராஜ், ரங்கராஜ், ராஜராஜன், எம்.கே.ஆனந்த், துபாய் விஜய், அசோக்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் ஜெகதீசன், சென்ராஜ், பிரபாக ரன், ஜி.வெங்கடேசன், கோபி, தமீம், மகேஷ், கேரளா ரவி, விஜயகுமார், ஐ.சி.எஃப்.சங்கர், செந் தில், லைனர் பிரபு, மோகன், சசிகுமார், மாமன்ற உறுப்பினர்கள் கமலா செழியன், ஈஸ்வரி வெங் கடேசன், மங்கை ராஜ்குமார், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் தினேஷ், பாலச்சந்திரன், இம்ரான், உமா மகேஸ்வரன் உள் பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.